International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# பத்துப்பாட்டு நூல்களில் புராண இதிகாசக் கூறுகள்

**மு. உமா**
முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் மு. முஜிபுர் ரகுமான்**
இணைப்பேராசிரியர், நெறியாளர் தமிழ்த்துறை,
இசுலாமியக்கல்லூரி (தன்னாட்சி நிறுவம்), வாணியம்பாடி -2

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் மொழியில் செவ்வியல் இலக்கியங்கள் தனிச்சிறப்புடையன. இவற்றில் பாட்டும் தொகையும் முதன்மை இலக்கியங்களாகத் திகழ்கின்றன. இதில் எட்டுத்தொகை என்பது தனித்தனி நூல்களாகத் தொகுக்கப்பட்ட தன் உணர்ச்சி பாடல்களாகும். பத்துப்பாட்டு என்பது பத்து நெடும்பாடல்களின் தொகுப்பாகும். பத்துப்பாட்டில் ஐந்து ஆற்றுப்படை நூல்களும், மதுரைக்காஞ்சியும் புறநூல் வரிசையில் வைத்து எண்ணப்படுவன. குறிஞ்சிப்பாட்டும் முல்லைப்பாட்டும் அகப்பொருளில் அமைந்துள்ளன. நெடுநல்வாடை அகபுற பொருளில் அமைந்துள்ளன. இயற்கை நெறி காலமான சங்க காலத்தில் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்துள்ளனர். வாய்மொழிகளாக பேசப்பட்டு வந்த புராணக்கதைகள் சங்க இலக்கியங்களில் இலக்கியங்களாக மிளிர்கின்றன. இவ்வாறான புராண இதிகாச கூறுகள் பத்துப்பாட்டில் இடம் பெறும் பாங்கை இக்கட்டுரை ஆராய்கிறது.

**முதன்மைச் சொற்கள்:**

பனிக்கடல், சுடர் இலை நெடுவேல், ஆறமர் செல்வன், கொற்றவை, திருமறு மார்பன், பூவிரிகச்சை, நனந்தலை, கொடுஞ்செலவு, ஆல்கெழு கடவுள், மாதாங்கு தடக்கை, செவ்வேற் சேஎய் , இருநிலம்.

## முன்னுரை

இதிகாச கதைகள் பன்னெடுங்காலமாக வாய்மொழி கதைகளாகச் சொல்லப்பட்டு வந்துள்ளன. அவை, பின்நாளில் இலக்கியங்களாக வடிவம் பெற்றன. இப்புராண இதிகாச கதைகள் இலக்கியங்களின் நிகழ்வுகளை உருவகப்படுத்தவும், உவமைநயம் ஊட்டவும் வந்தவை. இவை இலக்கியங்களின் காட்சிகளுக்கும் பாடுபொருள்களுக்கும் உயிரூட்டுவனவாய் அமைந்துள்ளன. இவ்வாறான வாய்மொழிக் கதைகள் பத்துப்பாட்டில் புலவர்களால் இலக்கிய நயம்பட எடுத்தாளப் பட்டுள்ளன.

## இந்திய புராண இதிகாச மரபு

புராணம் என்பது பழமை அல்லது தொன்மை என்று பொருள்படும். இந்திய சமூகத்தில் தொன்று தொட்டு வாய்மொழியாக கூறப்பட்டு வந்த வேத ஆகமங்களின் புனைக்கதைகளே புராணங்களாகும். இக்கதைகள் கடவுள் சார்ந்தும், சமயம் சார்ந்தும் புனையப்பட்டுள்ளன. கடவுள் - மனித அவதாரம் எடுத்தல், ஆற்றல் பெரும் வீரர்கள் செய்த அருள் செயல்கள், மனித வாழ்வில் முதன்மைப்படுத்தப் படுகின்ற நீதிநெறி சிந்தனைகள் முதலியவற்றைப் பாடுபொருளாகக் கொண்டு புராணக் கதைகள்

புனையப்பட்டுள்ளன. இந்திய மரபில் புராண இதிகாச கதை இலக்கியங்கள் தொன்மையான வேத ஆகம மரபுகளைப் பின்பற்றி படைக்கப் பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழில் புராணங்கள் 18 என்று கூறப்படுகின்றது. கடவுள்களின் செயல்களைப் போற்றும் நூல்கள் திருவிளையாடல் புராணம், கந்தபுராணம். இதில் கடவுள் நெறியாளர்களைப் போற்றும் பெரிய புராணம் தமிழ் புராண இலக்கிங்யகளில் முதன்மைப் பெற்றுள்ளன. இவை தமிழ் இலக்கியத்தில் முதன்மைப் படுத்தப்படுகின்ற புராணக்கதைகளாக விளங்குகிறன.

### இலக்கிய வடிவில் புராண இதிகாசக் கதைகள்

இந்திய சமூக மரபில் முன்னிலை பெற்று இதிகாசங்களாகத் திகழ்பவை இரண்டு. அவை, 1. மகாபாரதம் 2. இராமாயணம் இதிகாசங்கள் என்பது தொண்டு நிகழ்ந்த நிகழ்வு மீக்கூறும் கூறும் தொன்மையான கதை மரபாகும். கடவுள் மனித அவதாரம் எடுத்தல், அதன் சிறப்பியல்பு கள், தலை மக்களின் வீர தீர செயல்கள் முதலியவற்றை முதன்மைப்படுத்தும் கதைகள் புராண இதிகாச இலக்கியங்களாக ஆக்கம் பெற்றுள்ள. மேலும் இவ்விலக்கியங்கள் காலப் போக்கில் பல்கி பெருகின. இவற்றின் தொடர்ச்சி யாகத் தமிழில் புராணங்கள் பதினெட்டு என்று வழக்கு தோன்றியது. மரபார்ந்த கதைகள் சங்க இலக்கியங்களில், சங்க கால கண சமூகத்தின் வாழ்வில் நீதிகளைக் காட்சிப்படுத்த இக்கதைகள் உவமை, உள்ளுறை, இறைச்சி, வடிவம், குறியீடு, முதலான உத்திகளாகப் பயன்படுத்தப் பட்டு வந்துள்ளன.

### பத்துப்பாட்டில் புராண இதிகாசக் கதை மரபு

சங்ககாலப் புலவர்கள், வாய்மொழி கதைகளாக சொல்லப்பட்டு வந்த புராணக் கதைகளைத் தத்தம் பாடல்களில் எடுத்தாண்டுள்ளனர்.அவை, பாடல்களின் பாத்திர பண்புகளைக் காட்சிப்படுத்த வந்தவையே ஆகும். புராணகதைகள் பத்துப் பாட்டில் மதுரைக்காஞ்சியிலும் திருமுருகாற்றுப் படையும் பெரும்பான்மை உவமைகளாகவும், உள்ளுறைகளாகவும், இறைச்சி பொருளிலும் பயின்று வந்துள்ளன. இன்னபிற எட்டுநூல்களில் சிறுபான்மையே இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

### பத்துப்பாட்டில் புராணக் கதைமரபு

தமிழ்மொழியில் செவ்வியல் இலக்கியங்கள் தனிச் சிறப்புடையன. இவற்றில் பாட்டும் தொகையும் முதன்மை இலக்கியங்களாகத் திகழ்கின்றன. இதில் எட்டுத்தொகை என்பது தனித்தனி நூல்களாகத் தொகுக்கப்பட்ட தன் உணர்ச்சி பாடல்களாகும். பத்துப்பாட்டு என்பது பத்து நெடும் பாடல்களின் தொகுப்பாகும். பத்துப்பாட்டில் ஐந்து ஆற்றுப்படை நூல்களும், மதுரைக்காஞ்சியும் புறநூல் வரிசையில் வைத்து எண்ணப்படுவன. குறிஞ்சிப்பாட்டும் முல்லைப் பாட்டும்அகப்பொருள் மரபில் இடம் பெற்றுள்ளன. நெடுநல்வாடை அக புற பொருளில் அமைந்து உள்ளன. இயற்கை நெறி காலமான சங்க காலத்தில் மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை வாழ்ந்துள்ளனர். வாய்மொழிகளாக பேசப்பட்டு வந்த புராண கதைகள் சங்க இலக்கியங்களில் வாயிலாக இலக்கியங்களாக மிளிர்கின்றன. இவ்வாறான புராண இதிகாசகூறு கள் உவமை, உள்ளுறை, இறைச்சி, படிவம், குறியீடு என பல இலக்கிய உத்திகள் பத்துப் பாட்டில் இடம் பெறுகிறது.

### திருமுருகாற்றுப்படையில் புராண மரபு

பண்டை தமிழ்ச் சூழலில் தொடக்க காலத்தில் முருகன் குறிஞ்சி நிலத்தலைவனாக வணங்கப் படுதல், வெறியாட்டு நிகழ்த்தல் நடைபெற்றதை எட்டுத்தொகை குறிப்பிடுகின்றது. இப்பாட்டின் வளர்ச்சியே முருகனின் வழிபாட்டு முறை செயல்களாக புலவர் ஆற்றுப்படை குறிப்பிடுகின்றது. பத்துப்பாட்டு நூல்களில் முதன்மையாக வைத்து எண்ணப்படுவது திருமுருகாற்றுப்படை நூலாகும். இந்நூல் நக்கீரரால் முருகப்பெருமானைப் பாட்டுடைத் தலைவனாக வைத்து பாடப்பட்டுள்ளது. இந்நூலில் முருகனின் வீர தீர செயல்கள், அறுபடை வீடுகள் முதலான செய்திகள் கந்த புராணத்தில் காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இதில் இந்துசமய வேத ஆகமங்கள், வழிபாட்டுமுறைகள் பெரும் பான்மை இடம்பெற்றுள்ளது. முருகனின் செயல் கள் வேத ஆகம ஓதுவார்களின் வழிபாட்டு நிலைகள் புராண கதைகள் சார்ந்த கூறுகளைப் புலவர் நக்கீரர் இந்நூலில் இணைத்து காட்டுகிறார். முருகப்பெருமானின் ஆற்றல், செயல்களைத் திருமுருகாற்றுப்படையில் கூறும் நக்கீரர், முருகப்பெருமானின் சிறப்பைப் புராணக் கதையின் கூறுகளில் ஒன்றை உவமையாகக் காட்சிப்படுத்துகிறார். அவை,

*"பார்முதிர் பனிக்கடல் கலங்க உள்புக்கு*
*சூர்முதல் தடிந்த சுடர்இலை நெடுவேல்"*

(திருமுருகாற்றுப்படை, அடி (45,46)1

நிலமற்று பெற்ற குளிர்ந்த கடலே கலங்கும்படி கடலின் உள்ளே சென்று அசூரனைக் கொன்ற சுடர் விடுகின்ற இலை வடிவாகிய நெடுவேல்

என்று முருகனின் செயலை கூறுகின்றார் புலவர். இதில் தலைகீழாக நின்ற மாமர வடிவில், கடல் நடுவே இருந்த சூரனை அழித்தான் முருகன் என்பதை, புராண கதையை கூறிச் செல்கிறது. முருகன் சூரனைச் சுடர்நெறி வேலால் கொன்ற வரலாறு கந்தபுராணத்தில் விரிவாகக் கூறப் பட்டுள்ளது.

*"மாமுதல் தடிந்த மறுஇல் கொற்றத்து*

*எய்யா நல்லிசை செவ்வேள் சேஎய்"*

(திருமுருகாற்றுப்படைஅடி, 57-62)2

மேலும் முன்பொரு காலத்தில் முருகப்பெருமான், பிரம்மனின் அகந்தையை அழிக்கும் பொருட்டு பிரணவ மந்திரத்தின் பொருள் யாதென வினவ, பிரம்மனால் விடை கூறாது விட்டதால் முருகனால் சிறை செய்யப்பட்டார். சிறை செய்யப்பட்ட பிரம்மனை விடுவிக்கும் பொருட்டு திருமால், ருத்ரன், இந்திரன் மூவரும் வந்து ஆவினன்குடியில் வீற்றிருக்கும் முருகப் பெருமானிடம் வேண்டி நின்றனர். பின்பு பிரம்மனை விடுவித்தும் படைக்கும் மீண்டும் அளித்தான் முருகன் என்பதை,

*"பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறை*

*புள்அணி நீள்கொடிச் செல்வமும் வெல்ஏறு"*

(திருமுருகாற்றுப்படை,அடி.147,148)3

**'ஆவினன்குடி அசைதலும் உரியன் ஆதாஅன்று'**

(திருமுருகாற்றுப்படை,அடி.176)4

இவ்வடிகள் புலப்படுத்துகின்றன. ஆய்க்குடி என்பது மருவி ஆவினன்குடி என்று ஆனது. முருகனின் தோற்றத்தைக் கூறும்போது முருகப்பெருமான் மிக பெரிய இமயமலையின் உச்சியில் உள்ள நீல நிற தருப்பை நிறைந்த பசிய சரவண பொய்கையில் பஞ்சபூதங்களில் ஒன்றாகிய அக்னி, சிவபெருமானிடம் பெற்ற ஆறு தீப்பொறிகளும் ஆறு குழந்தைகளாக தோற்றம் பெற்றன. அக்குழந்தைகளை ஆறு கார்த்திகை பெண்கள் பொய்கையில் தாமரைத் தொட்டில் இட்டு வளர்த்தனர். ஒருநாள் உமாதேவியார் ஆறு குழந்தைகளையும் எடுத்து அணைக்கும் போது ஒன்றாகப் பொருந்திய செல்வனே முருகன் என்ற புராணச் செய்தி இடம் பெற்றுள்ளது.

*"அறுவர் பயந்த ஆறு அமர் செல்வ!*

*ஆல் கெழு கடவுள் புதல்வ"*

(திருமுருகாற்றுப்படை,அடி.255-256)5

*"மலைமகள் மகனே! மாற்றார் கூற்றே!*

*வெற்றி வேல்போர்க் கொற்றவை சிறுவ!"*

(திருமுருகாற்றுப்படை,அடி(257- 258)6

குழந்தையாகத் தோற்றம் செய்தார் என்பது புராணசெய்தியாகும். இவ்வாறாகப் புராணக்கதை கள் திருமுருகாற்றுப்படையில் பெரும்பான்மை இடம்பெற்றுள்ளன.

### பெரும்பாணாற்றுப்படையில் புராண இதிகாசக் கதைகள்

பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவன் தொண்டைமான் இளந்திரையன். இப்பாட்டுடைத் தலைவனின் பிறப்பைக் கூறும் உருத்திரங்கண்ணனார் இதிகாச கதைக் கூறுகளை உவமையாக எடுத்தாண்டுள்ளார்.

*"------------ ---------- ----------நீயிரும்*

*இருநிலம் கடந்த திருமறு மார்பின்*

*முந்நீர் வண்ணன் பிறங்கடை, அந்நீர்த்*

*திரைதரு மரபின், உரவோன் உம்பல்"*

(பெரும்பாணாற்றுப்படை அடி, 27-30)7

*"இலக்கு நீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்*

*வலம்புரி அன்ன, வசைநீங்கு சிறப்பின்"*

(பெரும்பாணாற்றுப்படை அடி,34-35)8

தொண்டைமான் இளந்திரையன் துரோணர் மரபில் வந்த அஸ்வத்தாமனுக்கும் மதனி என்னும் நீரர மகளிருக்கும் உண்டான செல்வனே திரவோன் என்பர் (ஆதி பருவம், 140ஆம்- அத்தியாயம் வில்லுபுத்துரார் பாரதம்). அம்மரபில் வந்தவனே இளந்திரையன் ஆவான் என்ற இதிகாசக் கூற்று இந்நூலில் இடம் பெற்றுள்ளது.

*"வெண்டிரைப் பரப்பிற் கடுஞ்சூற் கொன்ற*

*பைம்பூட்சேய்"* (பெரும்பாணாற்றுப்படை,அடி.47-48) 9

இளந்திரையனிடம் பரிசில் பெற்ற இரவலர்கள், சூரனை வதம் செய்த முருகப்பெருமானைப் பெற்ற கொற்றவைக்கு, பேய் மகளிர் முருகனின் பெருமைகளைப் புகழ்ந்துகூறி செல்கின்றனர். அதுபோல, நாங்களும் இளந்திரையனின் பெருமைகளைக் கூறிச்செல்கின்றோம் என்றனர். இதில் இளந்திரையனின் வள்ளல் தன்மையைப் புகழ்ந்து பாட முருகனின் செயல்களை உவமையாக கூறப்பட்டுள்ளதை அறிமுடிகின்றது.

### சிறுபாணாற்றுப்படையில் இதிகாசகதைக் கூறுகள்

சிறுபாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவனான ஓய்மா நாட்டு நல்லியக்கோடன் தன்னை, நாடி வந்த பாணர் கூத்தர்களுக்கு உணவளித்த முறையைக் கூற கருதிய நல்லூர் நத்தத்தனார், மகாபாரத கதையை உவமை நயத்துடன் எடுத்துரைத்துள்ளார்.

*"காஎரி .....ட்டிய கவர்கனைத் தூணிப்*

*பூவிரி பச்சைப் புகலோன் தன்முன்*

*பனிவரைமார்பன் பயந்த நுண்பொருட்*

*பனுவலின்வழாஅப் பல்வேறுஅடிசில்"*

(சிறுபாணாற்றுப்படை,அடி.238-241)10

அர்ச்சுனன் தன் கணை ஒன்றினால் தாண்டவ வனத்தைத் தீக்கு இரையாக்கிய வில்லாற்றல் உடையவன். அவனுடைய இளவலாகிய வீமன் எழுதி அருளிய 'மடைநூல்' விதியின் தப்பாதவாறு ஓய்மா நாட்டு நல்லியக்கோடன் உணவு சமைத்துப் பரிமாறினான் என்ற பாரதக்கதை இதில் எடுத்தாளப் பட்டுள்ளது.

**குறிஞ்சிப்பாட்டில் புராணக்கூறுகள்**

குறிஞ்சிப்பாட்டில் குறிஞ்சிநில தெய்வம் முருகப் பெருமான் என்பதை,

*"மாயோன் மேய காடுறை உலகமும்*

*சேயோன் மேய மைவரை உலகமும்*

*வேந்தன் மேய தீம்புனல் உலகமும்"*

(தொல்.அகம்.நூற்பா-7)11

என்ற நூற்பாவிற்கு ஏற்ப குறிஞ்சி நிலத் தெய்வமாகிய முருகப்பெருமானை உவமையாக சுட்டப்பட்டுள்ளது. குறிஞ்சிப்பாட்டில் தலைவியும் தோழியும் நீர் விளையாடிய போது ஏற்பட்ட மழைப்பொழிவின்நிகழ்விற்கு இனிய ஓசையுடைய முரசினையும், ஒளிபொருந்திய அணிகலன்களை அணிந்த முருகப்பெருமான் அசுரர்களைக் கொல்வதற்கு உயர்த்திய, விளங்கும் இலை தொழிலையுடைய வேல் போல் மின்னல் மின்னின என்று புராணக்கூற்றை உவமையாகக் காட்டப்பட்டுள்ளது.

*"இன் இசை முரசின், சுடர் பூண், சேஎய்*

*ஒன்னார்க்கு ஏந்திய இலங்கி இலைஎஃகின்*

*மின்மயங்கு கருவிய கல்மிசைப் பொழிந்தென"*

(குறிஞ்சிப்பாட்டு,அடி.51-53)12

இதில் மேகத்தின் இடி ஓசை, முரசாக அதிர்வதைப் போலவும், அதன் மின்னலின் ஒளி முருகப் பெருமான் அசுரர்களைக் கொல்வதற்கு உயர்த்திய வேலின் விளக்கம் போலவும், மழை நீர் மலையில் இருந்து அருவி விழும் காட்சியைக் கபிலர் நயம்பட புனைந்துள்ளார்.

**முல்லைப்பாட்டில் புராணக்கூறுகள்**

முல்லைப்பாட்டின் தொடக்கத்தில் மாலைப் பொழுதில் மேகம் திரண்டு எழுந்து மழையைப் பொழிந்தது என்பதைக் கூற வந்த நப்பூதனார், திருமாலின் பெருஞ்செயலை உவமையாகக் கூறிச் செல்கிறார். மாவலி என்னும் அரசனை அடக்குவதற்காகத் திருமால் வாமனனாகி, அவன் பால் சென்று மூன்று அடி நிலம் இரக்க, மாவலி மன்னன் அவர் கையில் நீர் வார்த்து அளிக்க முற்பட்டான். திருமாலின் கரத்தில் நீர் பட்ட அளவில் விண்ணும் மண்ணும் அளாவும்படி நெடுமாலாக உயர்ந்துயர்ந்து நிலவுலகை ஓர் அடியாலும், விண்ணுலகை மற்றொரு அடியாலும் அளந்து மூன்றாவது அடியினை மாவலி மன்னன் தலை மீது வைத்து அவனை பாதாளத்தில் அழுத்தி, அவன் அகந்தையை அழித்தான் என்ற புராணச் செய்தி இங்கு கடவுள் வாழ்த்துப்பாடலில் இடப்பட்டு உள்ளது. மேகம் மழை பொழிய உயர்ந்தெழுந் தமைக்கு திருமால் நெடிது உயர்ந்தெழுந் தமையை உவமையாக கூறப்பட்டுள்ளது.

*"நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு*

*வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை*

*நீர்செல நிமிர்ந்த மாஅல் போலப்*

*பாடு இமிழ் பனிகடல் பருகி , வலன் ஏர்பு ,*

*கோடு கொண்டு எழுந்த கொடுஞ்செலவு எழிலி"*

(முல்லைப்பாட்டு,அடி.1-5)13

என்று திருமால் நெடிதுஉயர்ந்தெழுந்தமையை உவமையாக கூறப்பட்டுள்ளது .

**மதுரைக்காஞ்சியில் புராணக் கூறுகள்**

பாண்டிய நெடுஞ்செழியனைப் பாட்டுடை தலைவனாகக் கொண்டு மாங்குடி மருதனாரால் பாடப்பட்டது மதுரைக்காஞ்சி. இந்நூலில் மாங்குடி மருதனார் சிவபெருமானை நெடியோன் என்று குறிப்பிடுகிறார். கோயில் அந்தி விழா நிகழ்வில் ஐம்பூதங்களையும் முறையே, ஒருசேர படைத்தவன் சிவபெருமான். எனவே சிவபெருமானுக்கு நடத்தப்படும் விழாவில்

*"நீரும், நிலனும், தீயும், வளியும்*

*மாக விசும்பொடு ஐந்து உடன் இயற்றிய*

*மழுவாள் நெடியோன் தலைவன் ஆக"*

(மதுரைக்காஞ்சி.அடி, 442 -445)14

என்ற அடியில் சிவபெருமானை நெடியோன் என்று அழைக்கப்படும் மரபை அறியமுடிகிறது. அவன் ஏனைய தெய்வங்களுக்கு முதல்வனாக சுட்டப்படும் செய்தி பின்னால் தோன்றிய மாணிக்கவாசகரின் திருச்சாழலிலும் இடம் பெற்றுள்ளது. பாண்டிய மன்னனின் சிறப்பைக் கூற வந்த மாங்குடி மருதனார்,

*தென்னவன் பெயரியதுன் அருந் துப்பின்*

*தொல் முதுகு கடவுள் பின்னர் மேய*

*வரைத் தாழ் அருவிப் பொருப்பின் பொருந !*

(மதுரைக்காஞ்சி,அடி.40-42)15

இவ்வடிகளில் தென் பகுதியில் இருந்த இராவணனை அகத்திய முனிவன் இசையால் பாடி பொதிய மலையை உருகும்படி செய்து இலங்கைக்கு போக்கினான். அதுபோல பாண்டிய மன்னனும் அத்தகைய தகுதியைப் பெற்றவனாகத் திகழ்கிறான் என்ற பாடல் அடிகள் புராண கூறுகளில் ஒன்றான இலங்கையையும் அதை ஆளும் இராவணனையும் குறிப்பிடுகின்றது.

*அளந்து கடை அறியா வளம் கெழு தாரமோடு*

*புத்தேள் உலகம் கவி-- காண்வர*

*மிக்கிப் புகழ எழுதிய பெரும் பெயர் மதுரை*

(மதுரைக்காஞ்சி,அடி.697-699)16

பாண்டிய மன்னன் பகைவர்களை அழித்து, கொண்டு வந்து சேர்த்து செல்வத்தால் மதுரை வளமிக்கு விளங்கியது. இந்நகரம் தேவர்கள் காண்பதுபோல, பொருள் இன்பத்தோடு வீட்டின் இன்பத்திற்கும் நிலைக்கலனாக விளங்குகிறது என்பதை மாங்குடி மருதனார் பாண்டியனின் செல்வத்தையும் மதுரையின் இம்மை மறுமை யையும் புகழ்ந்து பாடியுள்ளார்.

## தொகுப்புரை

⇒ தமிழில் புராணக்கதைகள் பன்நெடுங் காலமாக இருந்து வந்துள்ளன. அவை, வாய்மொழிக் கதைகளாகப் பேசப்பட்டு பின்பு இலக்கியங்களாக ஆக்கம் பெற்றுள்ளன.

⇒ சங்க இலக்கியத்தில் பாடல் நயத்தைக் காட்சிப் படுத்தவும், பொருளாழத்தை விளக்கவும் புராணக்கதைகள் புலவர்களால் எழுத்தாளப் பட்டுள்ளன.

⇒ கதைகள் உவமை உள்ளுறை இறைச்சி குறியீடு என பல்வேறுஉத்திகளாக பயின்று வந்துள்ளன. இவை பாடலின் பொருளுக்கு உயிரோட்டமாக அமைந்துள்ளன.

⇒ தமிழ் இலக்கியங்களில் தனித்தனி கதை களாக உவமைகளாக எடுத்தாளப்பட்ட புராண கதைகள் பின்பு தனித் தனி நூல்களாக ஆக்கம் பெற்றுள்ளன. அவை தமிழில் பல்கி பெருகி தனி இலக்கிய வகையாக வளர்ச்சி பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## முடிவுரை

புராண இதிகாசங்கள் பன்னெடுங்காலமாக வாய்மொழி கதைகளாக இருந்து வந்துள்ளன. அவை, பிற்காலத்தில் தான் இலக்கிய வடிவம் பெற்றன என்பதைச் சங்க இலக்கியங்கள் சான்று பகர்கின்றன. அவ்வாறு ,வாய்மொழிக் கதைகளாகக் கூறப்பட்டுள்ள புராண இதிகாச கதைகள், சங்க இலக்கியங்களில் பெரிதும் எடுத்தாளப்பட்டுள்ளன. அவற்றில் பத்துப்பாட்டில் மக்களின் வாழ்வியலின் தன்மைக்கு முறைமைக்கும் ஏற்ப அறநெறி போகட்டும் நோக்கிலும் உவமை நலம் சான்ற கதைகள் உவமை நலத்தோடு எழுத்தாளப்பட்டு வந்துள்ளன. பிற்காலத்தில் ஆகம வேத சமய நூலாகத் தோற்றம் பெற்றாலும், சங்க காலத்தில் அறநெறி சார்ந்த சிந்தனை மரபு கொண்டுள்ளது என்பதை இக்கட்டுரை மூலம் அறிய முடிகின்றது

## மேற்கோள் நூல்கள்:

1. திருமுருகாற்றுப்படை-பக்.27
2. மேலது-பக்.27
3. மேலது-பக்.51
4. மேலது-பக்.51
5. மேலது-பக்.53
6. மேலது-பக்.70
7. பெரும்பாணாற்றுப்படை-பக்.233
8. மேலது-பக்.233
9. மேலது-பக்.233
10. சிறுபாணாற்றுப்படை-பக்.171
11. தொல்.அகம்,பக்.262 (தொல்காப்பியம் மூலமும் உரையும், பேராமுனைவர் ச.வே.சுப்பிரமணியம்)
12. குறிஞ்சிப்பாட்டு-பக்.255
13. முல்லைப்பாட்டு-பக்.333
14. மதுரைக்காஞ்சி-பக்.37
15. மேலது -பக்.37
16. மேலது -பக்.159
17. மேலது -பக்.171
18. முனைவர் அ. விசுவநாதன், சங்க இலக்கியம் (தொ.ஆ) அம்பத்தூர், சென்னை -98 (முதற்பதிப்பு – 2004).